**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 106/2015**

நாள்: 16.03.2026.

பெயர்: இராஜேந்திரன் (வா.சா.1) த/பெ: சுப்ரமணியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

1) எனது தாத்தா காலத்தில் பாகம் பிரிக்கும்போது எனது தாத்தாவிற்கு எவ்வளவு சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து அமைந்துள்ள இடத்தில் எனது தாத்தாவிற்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் 9 செண்ட் ஒதுக்கப்பட்டது. எனது தாத்தா காலத்தில் பாகம் பிரித்துக்கொண்ட போது தாவா சொத்து உள்ள அனைத்து பகுதியும் நிலமாக இருந்ததா, நத்தமாக இருந்ததா என்றால் நத்தமாக மனைக்கட்டு 9 செண்டும், மனைக்கு தெற்கில் கொல்லை நிலம் 45 செண்ட் இருந்தது. எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட அளவை போல் தான் அவரது சகோதரர்களுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நத்தம் எந்த வருடத்தில் வந்தது என்றால் எனக்கு தெரியாது, எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்தே பட்டாவாக தான் உள்ளது.

2) இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதி பன்னீர் செல்வம் எனது தந்தைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.61/2015 என்றால் சரிதான். மேற்படி வழக்கிற்கு எனது தந்தை எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அந்த வழக்கிலேயே எதிரிடை பாத்தியக்கோரிக்கையாக இவ்வழக்கு பரிகாரத்தை கோராமல் இவ்வழக்கை தனியாக தாக்கல் செய்ததற்கான காரணம் என்ன என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது அதனால் இவ்வழக்கை தனியாக தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.61/2015 ல் வழக்கு தாக்கல் செய்த போது இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கப்பட்டு, அவ்வுத்தரவு எங்களுக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான், அந்த இடைக்கால உறுத்துக்கட்டளை இருக்கும் போதே நான், எனது தந்தை மற்றும் 3ம் பிரதிவாதி ராஜேந்திரன் தாவா சொத்தில் பிரச்சினை செய்தோம் என்றால் சரிதான், அப்போது 1 ம் பிரதிவாதிக்கு

எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பிரச்சினையில் 3ம் பிரதிவாதிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். 1989 ஆம் ஆண்டிற்கு முன்பு தாவா சொத்திற்கு தனியாக நத்தம் பட்டா இருந்ததா என்றால் இல்லை. எங்களுக்கு எவ்வளவு இடமோ, அதே அளவு தான் சிண்டு (எ) இராஜேந்திரனுக்கும் இருக்கிறது என்றால் சரிதான். வழக்குரையில் உள்ள மாதிரி வரைபடத்தை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்த்துள்ளேன், அதில் ACD என்பது கம்பி வேலி ஆகும். மாதிரி வரைபடத்தில் உள்ளே என்ன உள்ளது என்பது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான், வரைபடத்தில் 621/2C1 எனும் பகுதியில் என்ன உள்ளது என்றால் மச்சி வீடு(ஓட்டு வீடு) மற்றும் கூரை வீடு உள்ளது, வரைபடத்தில் அந்த வீடுகள் எங்கு அமைந்துள்ளது என்று ஏன் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் மாதிரி வரைபடத்தில் உள்ள கைரேகை எனது தந்தையுடையது இல்லை, அதனால் காட்டவில்லை.

3) எனது வீட்டிற்கு கிழக்கே யார் இடம் என்றால் அஞ்சலை இடம், அதற்கும் கிழக்கே பன்னீர் செல்வம், அதற்கும் கிழக்கே அய்யாக்கண்ணு மகன் வெற்றி செல்வம், அதற்கும் கிழக்கே நல்ல முத்து மகன் கிருஷ்ணமூர்த்தி இடம் உள்ளது. எனது வீட்டிற்கு கிழக்கே உள்ள அஞ்சலை இடம் என நான் கூறியது முன்னர் அஞ்சலையின் கணவர் கணபதியுடையது என்றால் சரிதான். மேற்படி அஞ்சலை, கணபதி ஆகியோர்களின் மகன் இராஜேந்திரன். கணபதி, இராஜேந்திரன் ஆகியோர் எனது வகையறாவை சேர்ந்தவர் இல்லை என்றாலும் அவர்கள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் சரிதான், அவர்கள் எனது தத்தாவிடம் கிரையம் பெற்றவர்கள். அஞ்சலை இடத்திற்கு கிழக்கே பன்னீர் செல்வம் என நான் கூறியது 1ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

4) வெற்றி செல்வன் தன்னுடைய மனைக்கட்டை சாமிதுரையிடம் கிரையம் பெற்றார். தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் சாமிதுரைக்கு இடம் உள்ளதா என்றால் எனது மனைக்கு தெற்கில் நிலம் உள்ளது. சாமிதுரை அந்த இடத்தை எனது தாத்தா பெரியசாமி மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தை தங்கவேல் ஆகியோருக்கு கிரையம் கொடுத்தார். மனைக்கட்டில் ஒவ்வொருவருக்கும் இரண்டு மனைக்கட்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல, ஒரு மனைக்கட்டு தான்

ஒதுக்கப்பட்டது. எனது மனைக்கட்டிற்கு மேற்கில் யாருடைய மனைக்கட்டு உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி பன்னீர் செல்வம் மனைக்கட்டு உள்ளது. 1ம் பிரதிவாதியின் மனைக்கட்டிற்கும் மேற்கில் நல்லமுத்து மகன் கிருஷ்ணமூர்த்திக்கு இடம் உள்ளதா என்றால் உள்ளது, அது வடபுற ரோட்டிலிருந்து ஆரம்பிக்கிறது, அதனை அவர் சடையர் மகன் இராஜேந்திரனிடம் விற்றுவிட்டார், அந்த இடத்தில் நல்லமுத்து மகன் கிருஷ்ணமூர்த்தி வீடு கட்டவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பன்னீர் செல்வம் தற்போது குடியிருக்கும் வீட்டிற்கு முன்னதாக எங்கு குடியிருந்தார் என்றால் வெற்றி செல்வம் வீட்டிற்கு மேற்கில் குடியிருந்தார். வெற்றிசெல்வம் வீட்டிற்கு கிழக்கில் நல்லமுத்து மகன் கிருஷ்ணமூர்த்தி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான், தற்போதும் அங்கு தான் குடியிருக்கிறார். நான் தற்போது குடியிருக்கும் வீட்டிற்கு மேல்புறம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு யாரும் குடியிருக்கவில்லை என்றால் சரிதான்.

**(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/சு.இராஜேந்திரன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.